**17. தலைப்பு 15 – சட்ட வரைஞர் திணைக்களம்**

---

**17.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**பாதீட்டு முரண்கள்**

---

மூன்று செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 57 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**17.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**17.2.1 உள்ளகக் கணக்காய்வு**

---

திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

**17.2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

திணைக்களத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

**17.3 செயலாற்றல்**

---

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

| கடமையின் தன்மை | 2014 சனவரி 01 இல் உள்ளவாறு வரைவு பூர்த்தி செய்யப்படாத கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டின்போது தரப்பினர்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வரைவைத் தயாரித்து உரிய தரப்பினருக்கு கையளிக்கப்பட்ட எண்ணிக்கை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரைவு பூர்த்தி செய்யப்படாத கோரிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கட்டளைச் சட்டத்தின் வரைவு (அடிப்படை மற்றும் திருத்தச் சட்டம்) | 19 | 39 | 28 | 30 |
| பாராளுமன்ற | 06 | 22 | 15 | 13 |

| | | | | |
|---|---|---|---|---|
| உறுப்பினர்களின் பிரத்தியோக அதிகாரச்சட்டம் | | | | |
| பிரமாணத்திருத்தம் (உதவிச் சட்டங்கள்) | 46 | 88 | 94 | 40 |
| மொத்தம் | 71 | 149 | 137 | 83 |

2014 ஆம் ஆண்டின்போது 137 அதிகாரச்சட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 47 அதிகாரச்சட்டங்கள் மாத்திரம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

## 17.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 27 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 03 | 25 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 36 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 20 | 04 |
| | மொத்தம் | 151 | 86 | 65 |